(அ) பட்டுக்கோட்டை நகரில் அதிக போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க புறவழிச்சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புறவழிச்சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. என்.ஆர். ரங்கராஜன், இருக்கையில் இல்லை.

வினா எண் 242. திரு. ஜெக. வீரபாண்டியன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை & வருவாய்த் துறை அமைச்சர்.

242—

காவிரி

***15966—திரு. ஜெக. வீரபாண்டியன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறையின் வழியே பாயும் காவிரி ஆற்றுப் பகுதியை ஆழப்படுத்தி சுத்தப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்போது அரசிடம் திட்டம் இல்லை என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. ஜெக. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி ஆற்றின் அழகைப்பற்றி தங்களைவிட நான் ஒன்றும்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2003 ஏப்ரல் 11]

புதிதாகச் சொல்லப் போவதில்லை. அப்படிப்பட்ட நிலையில் இன்றைய சூழ்நிலையில் மயிலாடுதுறையில் காவிரி, சென்னையின் கூவத்தை நினைவுபடுத்துவதைப் போல சாக்கடையாகத் தேங்கிக் கிடக்கிறது. பல்வேறு இடங்களில் மண் மேடிட்டு நீரோட்டமே தடைபடும் நிலை இருக்கிறது. ஒவ்வோர் ஆண்டும் துலா உற்சவ தினத்திலே இலட்சக்கணக்கான பக்தர்கள் மயிலாடுதுறையில், காவிரியாற்றிலே புனித நீராடுவது வழக்கம். சென்ற ஆண்டு காவிரியில் நீர் இல்லாததால் மாசுபட்ட தண்ணீரிலே பக்தர்கள் நீராட முடியாமல் மிகப் பெரிய சங்கடம் ஏற்பட்டது. வரும் ஆண்டிலாவது நிதி நிலைமையைக் கருத்தில்கொண்டு தமிழக அரசு, மயிலாடுதுறை துலா கட்டத்தையாவது தூய்மைப்படுத்தித் தர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறை தொகுதி, மயிலாடுதுறையின் வழியே பாயும் காவிரியாற்றை ஆழப்படுத்தவும், சுத்தப்படுத்தவும் பொதுப் பணித் துறையில் தற்போது திட்டம் ஏதுமில்லை. ஆனால் மயிலாடுதுறை நகரப் பகுதியிலிருந்து வரும் சாக்கடை நீர் காவிரி ஆற்றில் கலந்து ஆற்று நீரை மாசுபடுத்துவதைத் தடுக்கும்பொருட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் ரூபாய் 42 கோடி மதிப்பீட்டுத் திட்டத்தில் 9 கழிவு நீர் ஏற்றும் விசைப் பம்புகளை நிறுவி அதன்மூலம் வெளியேற்றப்படும் கழிவுநீரை மயிலாடுதுறை நகரத்திலிருந்து சுமார் 10 கி.மீ. தூரத்திலுள்ள ஆறுபாதி என்ற கிராமத்திற்குக் கொண்டு சென்று புல் வளர்க்கும் திட்டத்திற்குப் பயன்படுத்தும் வகையில் அரசால் அங்கீகரிக்கப்பட்டு பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மேலும், மயிலாடுதுறை கோட்ட சரகத்திலுள்ள காவிரியாற்றுப் பாசனத்திலுள்ள 247 பி.சி.டி. பிரிவு வாய்க்காலில் விவசாயத் தொழிலாளர் நலத் திட்டத்தின்கீழ் அரசாணை எண் 222, பொதுப் பணித் துறை, நாள் 27-6-2002-ன்படி ரூ.158.50 இலட்சம் செலவில் தூர் வாரும் பணி நிறைவேற்றப்பட்டுள்ளது. இரண்டாவது கட்டமாக, தற்போது அரசாணை எண் 34, பொதுப் பணித் துறை, நாள் 3-2-2003-ன்படி வேலைக்கு உணவு திட்டத்தின்கீழ் மேலும் 434 பிசிடி. கிளை வாய்க்காலில் ரூ.388 இலட்சம் மதிப்பீட்டில் தூர் வாரும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்பணிகளை 31-5-2003-க்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், காவிரி டெல்டாப் பகுதியிலுள்ள ஆறுகளையும், பாசன வாய்க்கால்களையும் சீரமைக்கும்பொருட்டு ரூ.460 கோடி மதிப்பீட்டில் திட்டம் தீட்டப்பட்டு, உலக வங்கி நிதியுதவி

கோரி மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு பரிசீலனையில் உள்ளது. காவிரி நீர் தகராறு சம்பந்தமான வழக்கு காவிரி நடுவர் நீதிமன்றத்தில் இருப்பதால் உலக வங்கி நிதி வழங்குவதில் தாமதம் காட்டுகிறது. காவிரி நடுவர் நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பு கிடைத்தவுடன் உலக வங்கியின் நிதியுதவி பெற்று திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

திரு. ஜெக. வீரபாண்டியன்: மாண்புமிகு அமைச்சருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். துலாக் கட்டம் என்பது பக்தர்கள் நீராடுவதற்கு மயிலாடுதுறை நகராட்சிக்கு உட்பட்டது. ஆனால் அதன் கட்டுப்பாடு பொதுப் பணித் துறையில் இருப்பதால் அதை மட்டுமாவது வரும் நிதியாண்டில் கொஞ்சம் அழகுபடுத்தித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் படித்துறையினைத் தூய்மைப்படுத்தும் பணி வரும் நிதியாண்டில் நிதிநிலைமைக்கு ஏற்ப எடுத்துக்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. ஜெக. வீரபாண்டியன்: அமைச்சருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அ. நடராஜன்.

திரு. அ. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறையில் காவிரியில் மண் எடுத்த காரணத்தால், மிகவும் பள்ளமாக இருக்கிறது. விவசாயத்திற்குத் தண்ணீரே வருவதில்லை. காவிரியில் ஐப்பசி மாதத்தில் குடமுழுக்கு விழாவில் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் நீராடுகின்றார்கள். ஆகவே பக்தர்கள் குளிப்பதற்கு வசதியாக காவிரியில் சாக்கடை நீர் சேர்வதைத் தடுத்து நிறுத்தி பக்தர்களுக்குப் போதிய வசதிகள் செய்து கொடுக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

2003 ஏப்ரல் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சந்தானம், காவிரிக்கும் நமக்கும் என்ன சம்பந்தம்? (சிரிப்பு)

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"காவிரி தென்பெண்ணை பாலாறு - தமிழ்
கண்டதோர் வையை பொருணைநதி"

என்று குறிப்பிட்டார்கள். அந்த வைகை நதி பெரும்பாலும் சீமைக் கருவேலியால் ஆக்கிரமிக்கப்பட்டு அந்த நதி இருக்கின்ற இடமே தெரியாத அளவிற்கு தற்போது இருக்கிறது. எனவே தமிழகத்தில் இருக்கின்ற காவிரி மட்டுமல்ல, வைகை போன்ற நதிகளையும் சீரமைப்பதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைகை நதியின் மையப் பகுதியில், அதாவது நகருக்குள் ஓடுகின்ற வைகைப் பகுதியில் தற்போது பணிகள் நிறைவேற்றப்பட்டு முடிக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் வைகை நதி தீரங்கள் அனைத்தையும் சீரமைப்பதற்குப் பரிசீலனை செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சந்தானம், வைகை சீரமைபபுத் திட்டம் என்ற அந்தக் குழுவிற்கு நான்தான் தலைவர். என்னிடம் தனியாக வாருங்கள்; பேசுவோம். (சிரிப்பு)

வினா எண் 243, திரு. ஆஸ்டின், மாண்புமிகு நிதி அமைச்சர்.

243—

சட்டமன்றத் தொகுதிகள்

***4730 திரு. ஆஸ்டின்:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழகத்திலுள்ள சட்டமன்றத் தொகுதிகளின் எல்லைகளை மாற்றி, தொகுதிகளின் எண்ணிக்கையைக் கூட்ட தமிழக அரசு தேர்தல் ஆணையத்திடம் கோரிக்கை வைத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS